

பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்கள் தனது 90–வது பிறந்தநாளையொட்டி நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில், முதலமைச்சர் அவர்களை சந்திக்க விரும்புவதாக தெரிவித்திருந்தார். அவரது விருப்பத்தை நிறைவேற்றிடும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.8.2025) சென்னை, அடையாறிலுள்ள பழம்பெரும் நடிகை திருமதி எம்.என்.ராஜம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து, பேசினார். இந்நிகழ்வின் போது, திருமதி துர்கா ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், திருமதி எம்.என். ராஜம் அவர்களின் மகன் பிரம்ம லஷ்மன் மற்றும் அவரது குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சி!

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் ஆளுமைத் திறனே காரணம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு!



சென்னை, ஆக.8-

“இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சி என்பது முதல்வர் மு.க. ஸ்டாலினின் ஆளுமைத் திறனே காரணம்” என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் கூறியுள்ளார்.

இதுகுறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய உயரத்தை அடைந்திருக்கிறது தமிழ்நாடு. 2024-25இல், ‘உண்மையான பொருளாதார வளர்ச்சி’யில் 9.69 சதவீதத்தைத் தொட்டு, இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்தது. 2032-33இல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்னும் இலக்கை அடையத் திட்டமிட்டு வரும் தமிழ்நாடு அரசு, அதை நோக்கிய பயணத்தில் உறுதியாக நடைபோடுவதை இந்தச் சாதனை உறுதிசெய்து இருந்தது.

பணவீக்கத்தைக் கணக்கில் கொள்ளாமல் மதிப்பிடப்படும் உண்மையான பொருளாதார வளர்ச்சியானது ஒரு மாநிலம் அடைந்துவரும் பொருளாதார வளர்ச்சி மீதான துலக்கமான பார்வையை அளிக்கக்கூடியது. அந்த வகையில், மத்திய புள்ளியியல் - திட்ட அமலாக்க அமைச்சகத்தின் தரவுகளின்படி 2023-24இல் ரூ.15.71 லட்சம் கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) கடந்த 2024-25இல் ரூ.17.24 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது.

கடந்த 5 மாதங்களுக்கு முன்பு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 சதவீதமாக இருந்தது. இந்த நிலையில் தற்போது 2024-25ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் பொருளாதாரம் 11.19% ஆக உயர்ந்திருப்பது, மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரியவந்துள்ளது.

இது நடப்பாண்டு தமிழ்நாடு பட்ஜெட்டில் கணிக்கப்பட்ட வளர்ச்சியை விட இது கிட்டத்தட்ட 2.2% அதிகம் எனக்கூறப்படுகிறது.

இதன் மூலம், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சியைப் பெற்று தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

சுமார் 14 ஆண்டுகளுக்குப் பிறகு 11.19 % என்கிற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அரசு பதிவு செய்து சாதனை படைத்திருக்கும் நிலையில், இது 2025-26-ஆம் ஆண்டில் 12 சதவீதமாக உயரும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டி இருப்பதற்கு திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆளுமைத் திறன் மிக்க நடவடிக்கைகள் காரணமாகும்.

திராவிட மாடல் அரசுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் பொருளாதார வளர்ச்சியில் மேலும் உச்சம் தொட்டு இலக்கை அடைவதற்கு வாழ்த்துகிறேன்.

இவ்வாறு வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு!

# முதலமைச்சரின் கூர்மதி வழிகாட்டுதலே வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!



சென்னை, ஆக.8–

“முதலீடுகளுக்கான முதல் முகவரி ஆகியுள்ளது தமிழ்நாடு! முதலமைச்சரின் கூர்மதி வழிகாட்டுதலே வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது” என்று நிதியமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் சென்னை அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :–

முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு – சீரான கொள்கைநெறி வழியில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளில் ஒன்று, மணிமகுடத்தில் மற்றொரு பொறித்த வைரக்கல்லாகத் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டி இருக்கிறது.

ஏற்கனவே நாம் சொல்லிருக்கக் கூடிய 9.69% என்கிற அந்த GSDP உடைய இலக்கையும் தாண்டி, இன்றைக்கு 11.8% பொருளாதார குறியீடுகள் உயர்ந்து இருக்கின்றன. ஏறத்தாழ 12% நெருங்கி வரக்கூடிய வாய்ப்பை பெற்று இருக்கிறோம்.

நம்முடைய சாதனையை நாம் தான் முறியடிக்க முடியும் என்கிற வகையில் 9.69% என்ற ஒற்றை இலக்கத்தில் இருந்த பொருளாதார வளர்ச்சி சதவீதத்தை இன்றைக்கு இரட்டை இலக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிற மகத்தான சாதனையை முதலமைச்சருடைய ஆட்சி உருவாக்கியிருக்கிறது.

இந்த இரட்டை இலக்கத்திலே பொருளாதார ஆட்சியை உருவாக்குவது, Real terms–ல் வளர்ச்சி பெறுவது என்பது கலைஞர் அவர்கள் ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது 13% வளர்ச்சியை நாம் பெற்று இருந்தோம். அதன்பின் 14 வருடத்திற்கு பிறகு இன்றைக்கு முதலமைச்சரின் ஆட்சியில்தான் இரட்டை இலக்க வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்று இருக்கிறது.

இந்திய அளவில் பல மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாடு தான் இந்த இரட்டை இலக்க வளர்ச்சியை பெற்று இருக்கிறது என்பது குறிப்பிட்டத் தக்கது. எனவே இந்த வளர்ச்சி என்பது 2030ஆம் ஆண்டு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்டுவோம் என்பதற்கு திடமான வழியை வகுத்து தந்துள்ளது.

முதலமைச்சரின் சீரிய முயற்சிகளிலான தொழில் முதலீடுகள், தொழில் முதலீடுகள் மூலம் கிடைத்த வேலை வாய்ப்புகள் என அனைத்தின் காரணமாக இந்தப் பொருளாதார வளர்ச்சி அமைந்திருகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கான முழு சூழ்நிலை களையும் நாம் உருவாக்கி இருக்கிறோம். நாம் முதலீடுகளுக் கான முதல் முகவரி தமிழ்நாடு என்கிற அளவில் முதலமைச்சர் முயற்சியின் காரணமாக ஈர்க்கப் பட்டு இருக்கக்கூடிய ஏராளமான முதலீடுகளே இந்தப் பெருமையைத் தந்து இருக்கிறது.

நிதி நிலைமையை நாம் சரியாகக் கையாண்டு இருக்கிறோம்; நாட்டின் பொருளாதாரத்தை நாம் உயர்த்தி இருக்கிறோம். கடன் வாங்குகிறார்கள் என குற்றச் சாட்டு வைக்கிறார்கள். ஆனால் வரைமுறைகளுக்கு உட்பட்டு முதலீடுகளுக்காக நாம் வாங்குகின்ற கடன்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊக்குவித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. ஒன்றிய அரசு நமக்கு உரிய நிதிகளை விடுவிக்காத போதிலும், நமது முதலமைச்சரின் கூரிய நோக்கிலான வழிகாட்டுதல் மூலம் இந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் கூறினார்.

### ஏழை - நடுத்தர மக்கள் பலனடையும் வகையில்

# குறைந்த கட்டணத்தில் வந்தே மெட்ரோ இரயில்கள் இயக்கப்படுமா?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 8 -

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பலனடையும் வகையில் குறைந்த கட்டணத்தில் வந்தே மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுமா என மாநிலங்களவையில் ரயில்வே அமைச்சரிடம், தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

தற்போது நடைபெற்று வரும் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் பேசிய தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன், சென்னையிலிருந்து வேலூர், விழுப்புரம் உள்ளிட்ட பெருநகரங்களுக்கு வந்தே மெட்ரோ ரயில்களை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதா? அவற்றை ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயணிக்கும் வகையில் குறைந்த கட்டணத்தில் இயக்க திட்டம் உள்ளதா? நாடு முழுவதும் எத்தனை வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன? என்ற கேள்விகளை ரயில்வே துறை அமைச்சரிடம் எழுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்துள்ள இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இந்திய ரயில்வே துறையால் 4 நமோ பாரத் என பெயர் மாற்றப்பட்ட வந்தே மெட்ரோ விரைவு ரயில் சேவைகளும், 144 வந்தே பாரத் சேவைகள் செயல்பட்டு வருகின்றன என்றும் பதில் தெரிவித்துள்ளார். அவற்றில் 16 வந்தே பாரத் சேவைகள் தமிழ்நாட்டிலிருந்து இயக்கப்படுவதாகவும், அதன்மூலம் சென்னை, வேலூர், விழுப்புரம் உள்ளிட்ட பல்வேறு நிலையங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் கூறியுள்ளார்.

புதிதாக நமோ பாரத் எனப்படும் வந்தே மெட்ரோ விரைவு ரயில் சேவைகளை அறிமுகப்படுத்துவது குறித்த கேள்விக்கு, மாநில எல்லைகளைத் தாண்டிச் செல்லும் போது, நெட்வொர்க் தேவைக்கேற்ப ரயில்கள் அறிமுகப்படுத்தப்படுவதாகவும், அவை போக்குவரத்து சாதகத்தன்மை, செயல்பாட்டு சாத்தியக்கூறு ஆகியவற்றுக்கு உட்பட்டு, இந்திய ரயில்வே செயல்படுத்தும் தொடர் செயல்முறையாகும் என்றும் ரயில்வே துறை அமைச்சர், தி.மு.க. எம்.பி. கிரிராஜனுக்கு பதிலளித்துள்ளார்.

### மாற்றுத் திறனாளிகளுக்கு ஒன்றிய அரசின் பங்காக

# மாதாந்திர உதவித் தொகையை ரூ.5000மாக உயர்த்தி வழங்க வேண்டும்!

## மக்களவையில் தே.மலையரசன் பேச்சு!



புதுடெல்லி, ஆக. 8–

மக்களவையில் கள்ளக் குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் பேசியதாவது:–

ஊனமுற்றோர் என்ற வார்த்தையை தமிழில் இருந்து நீக்கி மாற்றுத் திறனாளிகள் என்ற வார்த்தையை அகராதியி லிருந்து உருவாக்கி நடை முறைபடுத்திய உலகின் ஒப்பற்ற தமிழின தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி..... உள்ளாட்சியில் மாற்றுத் திறனாளிக்கு இட ஒதுக்கீடு அளித்த திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் தளபதியார் அவர்களையும் வணங்கி எனது உரையை தொடங்கு கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் மாதாந்திர உதவித்தொகை ஒன்றிய அரசின் பங்காக 2012 முதல் தற்போது வரை இந்திராகாந்தி ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வெறும் ரூ.300/–மட்டுமே வழங்குகிறது. சமூகநீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகத்திடம் நியாய மான வகையில் நிலைக்குழு உதவி தொகையை உயர்த்த பரிந்துரைத்தும் ஒன்றிய பா.ஜ.க அரசு தற்போது வரை உயர்த்தவில்லை. எனவே ஒன்றிய அரசின் பங்காக ரூ.5000/– ஆக உதவித்தொகையை உயர்த்த வேண்டும்.

அதேபோல் 80% ஊனம் இருந்தால் தான் உதவித் தொகை என்ற தற்போதைய விதியை மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம் 2016ன்படி 40% ஊனம் இருந்தாலே உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18 வயது அடைந்தால் தான் உதவித்தொகை என்ற தற்போதைய விதியை மாற்றி அனைத்து வயதினருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தே. மலையரசன் எம்.பி. பேசினார்.

### புதுடெல்லியில் வீட்டுவசதி – நகர்ப்புற விவகார நிலைக்குழுவில்

# ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்!

## மக்களவையில் – காஞ்சிபுரம் க. செல்வம் கோரிக்கை!



புதுடெல்லி, ஆக. 8 -

இந்திய நாடாளுமன்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார நிலைக்குழு கூட்டத்தில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் பின்வரும் கோரிக்கைகளை விவாதித்தார்.

RERA, 2016 ஐ செயல்படுத்துவது தொடர்பான, ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் (RERA) செயல்பாட்டிலும் உள்ள சில கடுமையான பிரச்சினைகள் குறித்து கவன ஈர்க்கும் விதமாக விவாதம் செய்தார்.

1. RERA இருந்தபோதிலும் அவற்றின் பணிகளில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் நிறுத்தப்பட்ட அலகுகள்: சமீபத்திய ஆய்வுகள், 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி, தோராயமாக 4.85 லட்சம் வீட்டு வசதி அலகுகள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் தாமதமாக உள்ளன. பெரும்பாலும் முக்கிய நகர்ப்புற சந்தைகளில், RERA செயல்படுத்தப்பட்ட போதிலும், SWAMIH நிதியைப் பயன்படுத்தினாலும். 50,000 தாமதமான அலகுகள் மட்டுமே முடிக்கப் பட்டு ள்ளன.

2, டெவலப்பர்களால் மூன்றாம் தரப்பு பண வரவு கணக்குகளைப் பராமரித்தல் : திட்ட நிதியில் 70% பணத்தை திருப்பி விடுவதைத் தடுக்க ஒரு மூன்றாம் தரப்பு பண வரவு கணக்கில் டெபாசிட் செய்ய வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. ஆனால் அவற்றை பின்பற்றப்பட வில்லை என்று அறிக்கைகள் குறிப்பிடு கின்றன.

3, உத்தரவுகளைச் செயல்படுத்தத் தவறுதல்: RERAவின் தீர்ப்பளிக்கும் அதிகாரிகளுக்கு பணத்தைத் திரும்பப் பெறுதல், தண்டனைத்தொகை மற்றும் கைது நடவடிக்கைகளை உத்திரவிட அதிகாரம் இருந்தாலும் இந்தத் உத்தரவுகளைச் செயல்படுத்துவதில் பரவலான தோல்வி காணப்படுகிறது.

4, தகராறு தீர்வு காலக்கெடு : வேண்டும் இந்தப் புகார்கள் எந்தக் காலக்கெடுவுக்குள் பரிசீலிக்கப்பட என்பதைப் சட்டம் குறிப்பிடவில்லை. அதனால் இந்தப் புகார்கள் பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்க வாய்ப்பு உள்ளது.

5, தலைமைத்துவம் மற்றும் நியமனம் : RERA அதிகாரிகள் பெரும்பாலும் வீட்டுவசதித் துறை அல்லது நுகர்வோர் ஆதரவு பின்னணியைச் சேர்ந்த துறைசார்ந்த நிபுணர்களைக் காட்டிலும் ஓய்வு பெற்ற IAS அல்லது பிற நிர்வாக அதிகாரிகளால் வழிநடத்தப்படுகிறார்கள் என்ற கவலைகள் எழுகிறது.

6,நிர்வாக அதிகாரங்கள் மற்றும் சட்ட தெளிவு தேவை: 2022ஆம் ஆண்டிலேயே, RERA தலைவர்கள் அகில இந்திய மன்றம், தெளிவான ‘நிர்வாக அதிகாரம்’ வழங்கப்பட வேண்டும் என்றும், சட்டத்தின் வார்த்தைகளை நிறுவுவதை உறுதி செய்வதற்காக தெளிவுப்படுத்தபட வேண்டும் என்று கோரியுள்ளது.

7, RERA - வின் நோக்கம் மற்றும் வரையறைகளில் உள்ள பிழைகளை சரிசெய்தல்: பல மாநிலங்களில் உள்ள கட்டுமான நிறுவனங்கள், பெரிய நிலப் பகுதிகளை ஒழுங்குமுறை வரம்புக்குக் கீழே உள்ள சிறிய திட்டங்களாகப் பிரிப்பதன் மூலம் RERA பதிவைத் தவிர்க்கின்றன. ஏனெனில் சட்டம் தற்போது 500மீ மற்றும் 8 அடுக்குமாடி குடியிருப்பு களின் கீழ் உள்ள திட்டங்களுக்கு விலக்கு அளிக்கிறது. கூடுதலாக, “பிளாட்” “கார்பெட் ஏரியா” மற்றும் திட்ட நிலைகள் ஆகியவற்றின் சீரற்ற வரையறைகள் நாடு முழுவதும் வாங்குபவர்களிடையே மேலும் ஏய்ப்பு மற்றும் குழுப்பத்தை அனுமதிக்கின்றன.

8, குறைவான நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் அணுகல் தடைகள்: வீடு வாங்குபவர்கள் மற்றும் சிறு டெவலப்பர்களில் கணிசமான பகுதியினர் RERA நடைமுறைகள், அவர்களின் உரிமைகள் மற்றும் புகார் வழிமுறைகள் பற்றி அறியாமல் இருக்கிறார்கள்.

எனவே, மேற்கூறிய இந்தப் பிரச்சினைகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்திடம் இந்தப் பிரச்சினைகளை எழுப்புமாறு இந்திய நாடாளுமன்ற நிலைக் குழுவிடம் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறுவேடல் க.செல்வம் கோரிக்கை விடுத்தார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாள் அமைதிப் பேரணி!

## திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் மாலை அணிவித்து மரியாதை!

கன்னியாகுமரி, ஆக. 8–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது ஆண்டு நினைவு நாளையொட்டி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி தொடங்கி ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நேற்று (07.08.2025 – வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி நாகர்கோவில், வடசேரி அறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து தொடங்கி அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம், மணிமேடை சந்திப்பு, எஸ்.பி. அலுவலக சாலை, கட்டபொம்மன் சந்திப்பு, அவ்வை சண்முகம் சாலை வழியாக நாகர்கோவில், ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பேரணியில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு அனைவரும் மரியாதை செலுத்தினர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7–ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பேரணியில் நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.



தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் குழித்துறை நகராட்சி சேர்மன் பொன் ஆசைத்தம்பி தலைமையில் மார்த்தாண்டத்தில் நடந்தது தமிழக முன்னாள் முதல்வர் கலைஞரின் ஏழாவது ஆண்டு நினைவு தினம் தி மு க சார்பில் நேற்று அனுசரிக்கப்பட்டது குழித்துறை நகராட்சி சேர்மேனும் முன்னாள் நகர செயலாளருமான பொன் ஆசைத்தம்பி தலைமையில் மார்த்தாண்டத்தில் கலைஞர் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் ஜாண் விக்டர், மேற்புறம் ஒன்றிய முன்னாள் செயலாளர் சிற்றார் ரவிச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி அஹமதுல்லா, ஆகியோர் முன்னிலை வகித்தனர். குழித்துறை நகராட்சி கவுன்சிலர்கள் அருள், லில்லி புஷ்பம், இளைஞரணி நகரத் தலைவர் ராஜு, நகர முன்னாள் துணைச் செயலாளர் சுதீர், வர்த்தக அணி தலைவர் ஷாஜிலால், மீனவர் அணி முன்னாள் அமைப்பாளர் ஜெகதீஷ், வக்கீல் ஷாஜி குமார் நிர்வாகிகள் சரவணன், ரசல் ராஜ், கிருபா உட்பட பலர் கலந்து கொண்டனர்